**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**KILVELUR**

**CC 151/2024**

LW 1 PW1

| | | | |
|---|---|---|---|
| Name | விமல்ராஜ் | Caste | |
| Father's/Husband Name | வீரமணி | Calling | |
| Village | சங்கரன்பந்தல் | Religion | |
| Taluk | | Age | 27/2025 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**01-09-2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் சங்கரன்பந்தலில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். எனது அண்ணன் வினோத்ராஜ் தூத்துக்குடியில் வேலை பார்த்து வந்தார். 29.10.2021 ம் தேதியில் மாலை சுமார் 5 முதல் 6 மணியளவில் தூத்துக்குடியிலிருந்து அவரது இரு சக்கர வாகனத்தில் எனது அண்ணனின் நண்பர் கருணாகரன் ஓட்ட எனது அண்ணன் வாகனத்தின் பின்னே அமர்ந்து சங்கரன்பந்தலுக்கு வந்து கொண்டிருந்தார். கீழையூர் ஈசனூர் சாலையில் காவல் நிலையத்திற்கு முன்பு எதிரே வந்த Mahindra Maxi cab வேன் மோதி விபத்து ஏற்பட்டது. கருணாகரன் என்ற எனது அண்ணனின் நண்பர் எனக்கு போன் மூலம் விபத்து ஏற்பட்டது குறித்து எனக்கு தகவல் போன் மூலம் சொன்னார்.

2. அங்கிருந்தவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறினார். தகவல் தெரிந்ததும் நானும் எனது அப்பாவும்

நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு சென்று பார்த்தபோது கருணாகரனுக்கு வலது கை மற்றும் காலில் அடிப்பட்டிருந்தது. எனது அண்ணனுக்கு தலையில் காயம் பட்டிருந்ததால் மிகவும் மோசமான நிலையில் இருந்ததாக சொன்னார்கள். சிகிச்சையில் இருந்த எனது அண்ணன் இரவு சுமார் 9, 9.30 மணியளவில் இறந்து விட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். நான் மறுநாள் 30 ம் தேதி காவல் நிலையம் சென்று விபத்து குறித்து புகார் அளித்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் நகல் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 9 ம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்காததால் யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்பதை என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். விபத்து குறித்து யார் தகவல் சொன்னார்கள் என்ற விபரத்தை எனது புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து குறித்து கருணாகரனுடன் போலீசார் புகாரை பெற்று கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அன்றைய தினமே கருணாகரனை போலீசார் விசாரித்தார்கள். புகார் மனுவினை போலீசார் சொல்லி நான் எழுதினேன் என்றால் சரியல்ல. நான் புகாரை எழுதி கொண்டு சென்று கொடுத்தேன்.

2. புகார் மனுவில் விபத்து எங்கு நடைபெற்றது என்பது குறித்து நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல நான் சொல்லியுள்ளேன். கீழையூர் ஈசனூர் ஈசிஆர் சாலையை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த சாலை 10 கி.மீ இருக்குமா என்றால் அதை விட அதிகமாக இருக்கும். புகார் மனுவில் கீழ ஈசனூர் ஈசிஆர் சாலை என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் குறிப்பிட்டு எந்த இடம் என்று சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. புகார் மனுவில் வாகனத்தின் எண்ணை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். TN50 L 6376 ஆகும். TN50 L 8376 என்று சொன்னால் தவறு ஆகும். ஓட்டுநரின் பெயர் தெரியுமா

என்றால் புகார் அளித்த போது  எனக்கு தெரிந்தது.  தற்போது 4 வருடம் ஆனதால் ஞாபகம் இல்லை.

3.  எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தார் என்று எவ்வாறு நான் தெரிந்து  கொண்டேன் என்றால் மறுநாள் நான் சம்பவ  இடம் சென்ற போது அங்கு வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.  அங்கு  குடியிருப்பு வீட்டில் குடியிருந்தவர்களும் அங்கு சம்பவத்தை பார்த்தவர்களும் என்னிடம் சொன்னதின் பேரில் எனக்கு தெரியும்.  மறுநாள்  எத்தனை மணிக்கு அங்கு சென்று பார்த்தேன் என்றால்  விடியற்காலை 7 மணியளவில் சென்று பார்த்தேன்.  சம்பவம் 29.10.2020 என்று சொன்னால் தவறு.  நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள தகவலை தான் போலீசார் விசாரணையிலும் எனது புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.  நான் சம்பவத்தை பற்றி  யாரிடமும் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றாலும் விபத்தில் இறந்த நபர் எனது அண்ணன் என்பதால்  பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது.  சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/ர.மீனாட்சி எம். எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கீழ்வேளூர்.